**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 10.07.2025**
**OS. No. 74/2021**
**வழக்கு சாட்சி PW.1–காந்தாமணி , க/பெ.துரைசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

8) எனக்கு 2004ம் வருடம் திருமணம் நடைபெற்றது, தேதி, மாதம் நினைவில்லை. எனக்கு திருமணம் ஆன பிறகு தான் என் கணவரின் கிராமத்திலுள்ள அவரது வீட்டிற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 நடவடிகையில் கருங்கல்லூர் என்று எழுதப்பட்டு காவேரிபுரம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உத்தரவு என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் மேட்டுர் வட்டம், கருங்கல்லூர் கிராமம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்திதல் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் தகவல் 1ல் கண்ட அரசாணை நிலை எண் 396 வருவாய் (நீ.மு.3–2)துறை நாள்.23.06.2006 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில ஒப்படைவு செய்து D card ல் கண்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டுதான் உத்தரவிடப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நிபந்தனையின் அடிப்படையில் தான் நிலம் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால், அதை ஒரு உரிமையாக எங்களால் கோர இயலாது என்றால் சரியல்ல. காவேரிபுரம் கிராமம் அ–பதிவேட்டில் ச.எண்.899/3, 899/4 ஆகியவை கல்லாங்குத்து என்று உள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது, ஆனால் அது தவறானது. காவேரிபுரம் கிராமம் அடங்கல் பதிவேட்டிலும் ச.எண்.899/3, 899/4 ஆகியவை கல்லாங்குத்து என்று உள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது, ஆனால் அது தவறானது.

10) பொதுவாக அரசு நிலத்தை நிபந்தனையுடன் வழங்கப்பட்டிருந்தால் அது உரிய அரசு அலுவலர்களிடம் அனுமதி பெற்றுதான் விவசாயத்திற்கோ அல்லது வேறு பயன்பாட்டிற்கோ மற்றவர்களுக்கு ஒப்படைவு வழங்க இயலும் என்றால் சரியல்ல. அரசு அலுவலர்களை பொறுத்தவரையில் வருவாய் நிலை ஆணைகளின் படி தான் செயல்பட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் பெயரில் வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை குறித்து பதிவுகள் மேற்கொள்வது சம்மந்தமான ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ச.எண்.899/3 ல் 0.33.50 ஹெக்டேர் நிலம் என்னுடைய பெயருக்கு பட்டா எண்.4616 ல் வழங்கப்பட்டது. ச.எண்.899/4 ல் 0.32.5 ஹெக்டேர் நிலம் என்னுடைய பெயருக்குதான் வழங்கப்பட்டது, ஆனால் வருவாய் ஆவணங்களில் விடுபட்டுபோய்விட்டது.

11) வா.சா.ஆ.1 உத்தரவில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவு வழங்கப்பட்ட தேதி 12.12.2006 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலுள்ள சொத்து விவரத்தில் ச.எண்.899/4, பட்டா எண்.4616 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம், ஆனால் பட்டா எண்ணை பிராதில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அதில் காவேரிபுரம் தெற்கு கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள கருங்கல்லூர் கிராமத்திற்கும், பிராதில் குறிப்பிட்டுள்ள காவேரிபுரம் தெற்கு கிராமத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான், கருங்கல்லூரை ஒட்டி தான் காவேரிபுரம் கிராமம் அமைந்துள்ளது.

12) கருங்கல்லூருக்கு கிராம நிர்வாக அலுவலகம் கருங்கல்லூரில் அமைந்துள்ளது. வா.சா.ஆ.1 உத்தரவிலேயே அரசாங்கம் நிபந்தனைக்குட்பட்டுதான் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்ன நிபந்தனை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. என்ன நிபந்தனை என்றே தெரிந்து கொள்ளாமல், அரசு அலுவலர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை 2021ம் வருடத்தில் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.1 உத்தரவில் என் பெயர் விடுபட்டுவிட்டதாக மனு ஏதேனும் வருவாய் அலுவலர்களுக்கு கொடுத்துள்ளேனா என்றால் 2018ல் கொடுத்தேன். 2006ம் வருடம் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ–1 உத்தரவிற்கு 2018ல் தான் மனு கொடுத்தேனா என்றால் ஆமாம், என் தந்தை 2011ல் இறந்தபிறகு தான் எங்களுக்கு தெரியவந்தது.

13) நிலம் என் பெயருக்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் அதில் அனுபவம் செய்திருந்தால் அதில் தவறு உள்ளதை அறிந்தவுடனே சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், நாங்கள் நிலத்தில் அனுபவத்தில் இல்லாததால் தான் இவ்வளவு காலம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2006ல் ச.எண்.899/3க்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது. நாங்கள் 2006ல் பட்டாவை சரியாக பார்க்காததால் எங்களுக்கு விடுபட்ட விவரம் தெரியவில்லை, மேலும் என் தந்தைக்கு படிப்பறிவு இல்லாததால் பட்டாவை என் சித்தப்பாவிடம் கொடுத்து வைத்திருந்தார். நாங்கள் அரசு அதிகாரிகள் மீது துர்லாபம் அடைவதற்காக காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகளை பொறுத்தவரையில் அரசு நிபந்தனையுடன் வழங்கப்பட்ட நிலம் சட்டத்திற்குட்பட்டுதான் அவர்கள் செயல்பட இயலும் என்றும், அதனால் நாங்கள் அந்த நிலத்தை உரிமையாக கோர இயலாது என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான கல்லாங்குத்து என்ற நிலத்தை நாங்கள் அனுபவித்து வருவது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

14) உண்மையில் பட்டா எண் விடுபட்டிருந்தால் வட்டாட்சியரிடம் மனு கொடுக்கவேண்டும் என்றும், அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவரின் மேல் அதிகாரிகளிடம் மனு செய்யவேண்டும் என்றும், அதற்கு பதிலான நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடி கொள்ள இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அரசு நிலை

ஆணைப்படி தான் செயல்பட்டு வருகிறார்கள் என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.